முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1352

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.06.2023, திங்கட்கிழமை

1. ஓங்கார பிரம்ம சூட்சுமமே
ஓங்கார ஞான இரகசியமே
ஓங்கார நல்லுலகம் படைக்க
ஓங்காரக்குடில் படைத்த ஆறுமுக அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் வைகாசி மாதம் 29 ம் நாள், 12.06.2023, திங்கட்கிழமை)
வரங்களாக ஆறுமுகன் யானும்
வல்லமைபட உன்னுள் இருந்து வழிநடத்த
3. நடத்துகின்ற அரங்கன் இந்த சன்மார்க்கம்
ஞானலோகம் படைப்பது உறுதிஉறுதி
இடரின்றி அரங்கன் சீடர்களெல்லாம்
இந்த உலகத்தைக் காப்பது உறுதிஉறுதி
4. உறுதிகொண்டு அரங்கன் சன்மார்க்கத்தை
உலகமெல்லாம் தொண்டர்கள் கொண்டு செல்ல
கருதிவந்து அரங்கன் தர்மத்தை
கலியுகத்தில் ஆற்றல்பட வலுவாக்கிட
5. ஆக்கவே உலக மாற்றங்கண்டு
அரங்கனால் அற்புதம் நிகழக்கூடும்
வரமாக அரங்கன் சீடர்கட்கெல்லாம் வல்லமையான ஞானிகள் நிலைபெருகி
பேருலகம் ஞான ஆட்சிதனை பிசகின்றி அரங்கன் தொண்டுவழி
அடையக்கூடும்
6. கூடவே அவதார நோக்கமாக
குரு அரங்கன் செயல்படும் ஞானவழி
நாடெங்கும் பரவி நின்றிட
ஞான ஆட்சி ஞானிகளாட்சியாக மாற்றம் நிகழக் கூடும்

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–